Registered as a News paper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM  மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 28 | (10.4.94) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 51

## யாழ் நகரப் பகுதியில் 90வீத தாய்மாருக்கு போசாக்கு குறைவு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வாழும் பாலூட்டும் தாய்மார்களில் தொண்ணூற்றியேழு வீதமானவர்கள் மந்தமான போசாக்கினால் பாதிக்கப் பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாநகர தாய் சேய் நலன் பேணும் பகுதியினர் மேற் கொண்ட ஆய்வு நடவடிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது; தமது சிகிச்சை நிலையங்களுக்கு சிகிச்சைக்கு வரும் தாய்மார்களை மட்டுமே கருத்திற்கொண்டு மேற்படி புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டதாகவும், இந்த நிலையில் காணப் படும் தாய்மார்களால் குழந்தைகளுக்கு தேவையான தாய்ப்பால் வழங்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தொடர் குண்டுவெடிப்புக்கள்; நான்கு பெரிய ஹோட்டல்கள் பாரிய சேதம்

## நான்கு தமிழ் இளைஞர்கள் கண்டியில் கைதாகினர்

(கண்டி)

தமிழ் இளைஞர்கள் நால்வர் கண்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கண்டி வல்லபொல பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தியபோது மேற்படி தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

இவர்கள் தொடர்ந்து பொலிஸ் காவலில் வைக்கப் பட்டிருப்பதாகவும் இவர்களின் நடமாட்டம் குறித்து கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து மேற்படி பொலிஸாரினால் தேடுதல் நடத்தப் பட்டதாகவும் கண்டி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 33 இலங்கையர்கள் ஜேர்மனியில் கைது

(கொழும்பு)

ஜேர்மனிக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற 33 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது: செக் குடியரசில் இருந்து ட்ரக் வண்டி ஒன்றின் மூலம் ஜேர்மன் எல்லையை கடக்க முற்பட்டபோதே இவர்கள் கைதாகினர்.

கைதான 33பேரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

## மண்ணெய் எடுத்துவர கப்பல் கட்டணம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய்க்கான கப்பல் கட்டணம் தொடர்ந்து அறவிடப்படும் என்று யாழ். அரசாங்க அதிபர் இரு... இத மாற்று முடிவுகளும் எடுக்கப்படவில்லை; நிதி அமைச்சின் அறிவிப்பை அடுத்தே இதுபற்றி பரிசிலனை செய்யப்படும் என்று அரச அதிபர்...

## மிருகக் காட்சிசாலையிலும் குண்டு வெடிப்பு

[கொழும்பு]

நேற்று முன்தினம் இரவிலிருந்து நேற்று நண்பகல் வரை இடம்பெற்ற ஐந்து குண்டுவெடிப்புக்கள் கொழும்பு நகரையே அதிரவைத்தது. இக்குண்டு வெடிப்பின் காரணமாக கொழும்பிலுள்ள நான்கு பிரபலமான பெரிய ஹோட்டல்கள் சேதமடைந்தன. ஒருகுண்டு வெடிப்புச்சம்பவம் தெகிவளையில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்குள் இடம்பெற்றது.

இக்குண்டுவெடிப்புகளில் சிக்கி மூவர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் பி. பி. ஸி, தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியிலிருந்து நேற்று நண்பகல் வரை இக் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்தன. 14 மணிநேர இடைவெளியில் ஐந்து குண்டுகள் வெடித்தன.

முதலாவது குண்டு நேற்று முன்தினம் இரவு கல்கிசை ஹோட்டலுக்கு அருகே வெடித்தது இக் குண்டுவெடிப்பின் காரணமாக மகேந்திரன் மதிவதனன் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய மூன்று குண்டுகள் நேற்று அதிகாலையில் வெடித்தன. இக் குண்டு வெடிப்பில் ஹோட்டல் தாஜ் சமுத்திரா, ஹோட்டல் சபையர், ஹோட்டல் மரியன் இன் ஆகியவற்றுள் வெடித்தன. ஹோட்டல்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்பால் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த குண்டு தெகிவளை மிருகக் காட்சிச் சாலையில் நேற்றுக்காலை வெடித்தது இக்குண்டு யானைகள் கட்டப்படும் இடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது என கூறப்படுகிறது. குண்டு வெடிப்பு இடம் பெற்றபோது 300 பார்வையாளர்களும் 150 வேலையாட்களும் மிருகக்காட்சிச் சாலை வளவில் இருந்தனர் எனவும் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப்புலிகள் இயக்கமே குண்டு வெடிக்க காரணம்

### அரசாங்கப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தை நோக்கும்போது இதற்கு விடுதலைப்புலிகளே காரணம் ... நான சிறிய குண்டு வெடிப்புகள் மூலம் ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர் ... வந்திருக்கிறது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை குண்டு வெடிப்பிற்கு விடுதலைப் புலிகள் இயக்கமே காரணம் ...

## வீரச்சாவு



2-ம்லெப்.ஜெயந்தன்

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். ஜெயந்தன் (முத்தையா ஜெயபாலன், வி77 குடியேற்றத்திட்டம் நாவற்குழி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திலிருந்து கப்பலில் ஏற்றிவரப்படும் மண்ணெண்ணெய்க்குரிய கட்டணம் அறவிடுவதில் எதுயப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பொருளுக்குரிய கப்பல் கட்டணம் அறவிடுவது குறித்து பலரும் விசனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ) (கி)

விடுதலைப்புலிகளே காரணம் என்பது புலனாகிறது என அரசுப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதியில் அரச படைகள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டு வருகையில் இவ்வா கொழும்பு செய்தியாளர் வடபகுதியில் இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின் நாட்டின் உல்லாசப்பயணத்துறை நாசமாக்கப்படும் என்று இக்குண்டு வெடிப்புகள் மூலம் அரசுக்கு செய்தி சொல்லப்

புலிகள் இயக்கமே காரணம் என இதுவரை தடயம் ஏதும் கிடைக்கவில்லை என ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை 14 மணி

(6ஆம் பக்கம் பார்க்க)

# உல்லாச பயணத்துறைக்கு பெரும் சேதம் விளைவிக்கும்

## கொழும்பு குண்டு வெடிப்பு குறித்து பி. பி. ஸி

(கொழும்பு)

கொழும்பில் இடம் பெற்றுள்ள குண்டு வெடிப்புக்கள் நாட்டின் உல்லாசப் பயணத்துறையை அழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவையாகும். ஏப்ரல் மாத காலப்பகுதியிலேயே நாட்டிற்கு பெருமளவு உல்லாசப் பயணிகள் வருவது வழக்கம் என ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இத்தகைய குண்டு வெடிப்புகள் மேலும் தொடராமல் இருப்பதற்கு எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் அதிகாரிகள் நேற்று அவசர கூட்டம் ஒன்றை கூட்டி ஆராய்ந்துள்ளனர். இதில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் குறித்து எனக்கு திருப்தி ஏற்பட்டுள்ளது என பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உள்நாட்டுப் போருக்காக பெருமளவு நிதியை செலவிட்டு வரும் அரசுக்கு ஆண்டுக்கு 20 மில்லியன் டொலர் வருமானம் தரும் உல்லாசப் பயணத் துறையை கொழும்பு குண்டு வெடிப்புகள் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் என பி.பி.ஸியின் சிங்கள சேவையின் செய்தியாளர் எல்.மோ. பெர்னான்டோ தெரிவித்தார்.

பல பில்லியன் டொலர் செலவில் ஆயுதங்களையும்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# குண்டு வெடிப்பு தொடர்பாக ஒருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினமிரவு 8 30க்கும் 8 45க்கும் இடையே முதலாவது குண்டு வெடிப்பு கல்கிசை கடற்கரைக்கு அருகே இடம் பெற்றது. விமான போக்குவரத்து நிறுவனமொன்றில் உதவியாளராக கடமையாற்றும் ஒருவர் இச் சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளார். இவருடன் சென்ற இன்னுமொருவர் இச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார். அருணாசலம் எனச் சந்தேகிக்கப்படும் இவர் குண்டு வெடித்த இடத்தில் வைத்து பொலிஸாரால் கைது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# பிளாஸ்டிக் குண்டென ராணுவ வட்டாரம் தகவல்

நேற்றும், நேற்றுமுன்தினமும் கொழும்பில் ஐந்து இடங்களிலும் வெடித்த குண்டுகள் பிளாஸ்டிக் வெடிகுண்டுகள் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (6 ஆம் பக்கம் பார்க்க)

# டி.பி. யின் கொள்கைக்கு பதிலடியான தாக்குதல்

(கொழும்பு)

யுத்தம் வடக்கில் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றது. வேறு எங்கும் யுத்தநடவடிக்கை இல்லை என ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அண்மையில் தெரிவித்த கருத்துக்கு கொடுத்த பதிலடியாகவே குண்டு வெடிப்புச் சம்பவத்தை எடுக்க முடியும் என பி. பி ஸி. சிங்கள சேவையின் கொழும்பு செய்தியாளர் எல். மோ. பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வெற்றிடங்களை நிரப்ப அரச அதிபருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

திணைக்களங்களில் உள்ள இலிகிதர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க அதிபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்ற யாழ். அரசாங்க அதிபர் இந்த அனுமதியைப்பெற்று திரும்பியுள்ளார்.

இதன்மூலம் அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ), (உ)

# மாணவர் உணவு முத்திரை 39 மில்லியன் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மாணவர் மதிய உணவு முத்திரையால் கிடைக்கவேண்டிய பணம் 39 மில்லியன் ரூபாவை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாணவர் உணவுமுத்திரைக்கான உணவுப் பொருள்கள் வழங்கியது தொடர்பாக தமக்குச் சேரவேண்டிய பணத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சேவை சமூகசேவை பகுதிக்கு முன்பாக மறியல் போராட்டம் செய்ய முனைந்ததும் பின்னர் அது கைவிடப்பட்டதும் தெரிந்ததே.

கடந்த ஆண்டு மாணவர் மதிய உணவு முத்திரைக்கான கொடுப்பனவே இப் பணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசேட படகுச்சேவை

புதுவருடத்தை முன்னிட்டு வரும் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் கிளாலி-பூநகரி விசேட படகுச் சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

# இரவோடு இரவாக கொழும்பில் நூற்றுக்கணக்கான தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளை அடுத்து இரவோடு இரவாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களை ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்து தேடுதல்களை ஆரம்பித்தனர்.

அப்பகுதியிலிருந்து வெளியேற எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் அப்பகுதியில் நடமாடியவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வீடு வீடாகச் சென்று தீவிர விசாரணைகளில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா படையினர் நூற்றுக்கணக்கான தமிழர்களை கைது செய்து கொண்டு சென்றனர். குண்டு வெடிப்பு நடந்து சில மணிநேரங்களிலேயே நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு விட்டனர் என கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கிழக்கு பல்கலை. மாணவர் கவனத்திற்கு

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் யாழ்ப்பாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுவெடிப்புக்கள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்த நிலையிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமைந்திருந்த ஹோட்டல்களில் குண்டுகள் வெடித்தமை குறித்து அரசாங்க மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் வியப்படைந்துள்ளதாக பி. பி. ஸியின் சந்தேசிய சேவை குறிப்பிட்டது.

இராணுவத்தலைமையகம், விமானப்படைத் தலைமையகம் ஆகியவற்றின் அருகில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குண்டு வெடித்துள்ளது. அத்துடன் பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகை இந்த ஹோட்டலில் இருந்து 800 யார் தொலைவிலேயே உள்ளது.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான மரியன்ற் ஹோட்டல் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலும் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தல

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

கைவைன்பிறவுன் 1மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு: 'கலிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (7981)

## தேவை

முந்திரிகைக் கொடிப் பந்தலுக்கு பாவித்த கம்பிதேவை. தொடர்பு; தேவன் பல்தொழில் நிறுவனம், கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு. (டானியல் தும்புத் தொழிலகம்). (7971)

## தேவை

பனந்தும்பு தேவை: தொடர்பு: தேவன் பல்தொழில் நிறுவனம் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு: (டானியல்தும்பு தொழிலகம்) (7972)

## விற்பனைக்கு

தரமானதிலான புதிய சுருக்கு வேட் விற்பனைக்குண்டு. தொடர்பு: அறிவரன் புத்தகசாலை, 309 விரசன்லி வீதி, (ஆரியகுளம் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம்: (7973)

## தவறிவிட்டது

7-4-94 அன்று இ: செந்தமிழ்ச்செல்வன் 600882562V) என்பவரின் அடையாள அட்டை மணிப்பேர்ஸ் உடன் கொய்யாத்தோட்டம்-கொக்குவில் இடைப்பட்ட பகுதியில் தவறி விட்டது: கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சோபனா ஆடையகம் 16, பெரியகடை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-9066)

## தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேப் செற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல. 8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-8985)

## இன்றைய நிகழ்வு

இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் ஒன்பது மணியளவில் பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை பத்திரகாளி கோவிலடியில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் முன்னாள் உபதலைவர் க. புவனேந்திரனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் இ. செ. ச. யாழ். கிளைத் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது;

## மாணவர் முத்திரை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலாளர்களிடமிருந்து 1993 யூன், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகளை ஏப்பிரல் 12ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளும்படி பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை இம்மாணவர் மதிய உணவு முத்திரைகள் அதிபர்களினால் ஏப்பிரல் 20ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டுமெனவும் நேற்று யாழ் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், ப.நோ.கூ. சங்க முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்; (இ)

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்படும் எமது ''புத்தூக்கி'' குளிர்பானங்களை வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் நன்மை கருதி யாழ் குடாநாடு பூராவும் 10-04-1994 தொடக்கம் பின்வரும் விற்பனை விலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இந் நடைமுறையினை விநியோகத்தர்களும், சில்லறை வியாபாரிகளும் 10-04-1994 தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்;

| குளிர்பான வகைகள் | மொத்த விற்பனை விலை | சில்லறை விற்பனை விலை |
|---|---|---|
| 300 மி. லீ. கோலா | 11. 00 | 12- 50 |
| 300 மி லீ இஞ்சி | 11- 00 | 12. 50 |
| 300 மி லீ ஏனையவை | 10. 50 | 12- 00 |
| 400 மி லீ இஞ்சி | 13. 00 | 14. 50 |
| 400 மி லீ ஏனையவை | 12. 50 | 14. 00 |

அனைத்து சில்லறை வியாபாரிகளும் மேற்குறித்த சில்லறை விலைகளுக்கு விற்பனை செய்வதுடன் தங்களின் தொடர்புகளை தங்களுக்கு சேவை செய்யவென அமர்த்தப்பட்ட தங்கள் பகுதி ''புத்தூக்கி'' மென்பான விநியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| விநியோகத்தர்கள் | விநியோகப் பகுதி |
|---|---|
| 1) ''இனிமை'' மென்பான விநியோகத்தர், 54 ஏ புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசம் |
| 2) ''புத்தூக்கி'' மென்பான விநியோகத்தர், ஐ சிவனேசன், கே. கே எஸ். வீதி, இணுவில் | வடமராட்சி, யாழ்ப்பாணம் நல்லூர் தவிர்ந்த வலிகாமப் பிரதேசம். |
| 3) ''கலையகம்'' மென்பான விநியோகத்தர், பிரதான வீதி, சாவகச்சேரி | தென்மராட்சிப் பிரதேசம் |

## ஆதரவுக்கு நன்றி

பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணி,
இல. 75/1, பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

(சி-9075)

# பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவிற்கான பயிற்சி நெறி இம்மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. பொ; சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்: சுமார் 45 மாணவர்கள் இப் பயிற்சி நெறியில் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (22)

## யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப்பட்டப்படிப்புகள்

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B. A
- வணிகமாணி B, COM
- விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B. Sc

க. பொ. த உயர்தரத்தில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்

# 41-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
28 - 12 . 1972

வீரச்சாவு
01 - 03 - 1994

## கப்டன் ஆண்டகை / கந்தையா
(தியாகராசா ஞானவேல்)

மயிலிட்டி

# நினைவு கூருகின்றோம்...
## 1994-04-10

1984-ம் ஆண்டு இத்தினத்தில் சிறிலங்காப் படையினரால் காவல்நிலையத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன் உட்பட படுகொலை செய்யப்பட்ட 08 தமிழர்கள்,

1988 ம் ஆண்டு கடலானைப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய,

2ம் லெப். மணாளன் (தியாகராசா குகன்-சிப்பித்திடல், தம்பலகமம்-திருமலை)
ஜானி (செபஸ்ரியான் ஜெயராசா-சின்னயாழ், வெள்ளைமணல், கிண்ணியா-திருமலை)
ராஜ்குமார் (கந்தசாமி சச்சிதானந்தம்-ஆலங்கேணி-திருமலை)
அர்ச்சுனா (வைரமுத்து கனகரத்தினம்-ஆலங்கேணி திருமலை)

வேரவிலில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய.

சின்னரவி (ஆறுமுகம் புவனேஸ்வரன்-முள்ளி ஒழுங்கை, அரியாலை-யாழ்)

மட்டு-பெரியபுல்லுமலைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு அடித்துக்கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த

ஹசன் (பெ. குமாரவேல்-வேலைத்தோட்டம் -பதுளை)

இதே பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு எரித்துக்கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

குயா (சா தியாகராசா-இலுப்படியடிச்சேனை-மட்டு)

1991-ம் ஆண்டு மட்டு தொப்பிக்கல்மலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகை நடவடிக்கையினால் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய போராளிகளின் புகழுடல்களை மீட்கும் போரில் வீரச்சாவெய்திய,

ராஜேந்திரன் (வேலாயுதம் சுந்தரராஜன்-கொத்துக்குளம்-வம்பாறை)
கப்டன் சங்கர் (முருகையா சுந்தரலிங்கம்-கறுவாக்கேணி, வாழைச்சேனை-மட்டு)
கப்டன் அமுதன் (கறுவல்தம்பி நவரத்தினம் -இரால்-மட்டு)
லெப். ரமேஸ் (கந்தப்பர் கதிரவேல்-வந்தாறுமூலை-மட்டு)
2-ம் லெப். மாலி (கல்லிபுரம் இராதாகம்-திருப்பழுகாமம்-மட்டு)
கிரி (-சிவயோகநாதன்-நாவற்குடா-மட்டு)
அமல்ராஜ் (மயில்வாகனம் இராஜேந்திரன்-வெல்லாவெளி-மட்டு)
செல்வரூபன் (பொன்னையா புண்ணியமூர்த்தி-இலுப்பையடிச்சேனை-மட்டு)
நிமால் (-யோகன் நாவற்குடா-மட்டு)
ராவ் (தம்பிப்பிள்ளை ரவீந்திரநாதன்-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)
ஜெயவேந்தன் (மாணிக்கம் மகாலிங்கம்-கொம்மாந்துறை-மட்டு)
அசோக் (செல்வராஜா நிர்மலராஜ் சந்தாறுமூலை-மட்டு)
அல்பேட் (சின்னப்பர் பிரான்சிஸ் பதுளை-மலையகம்)

மன்னார்-மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

நாயகன் (தெட்சணாமூர்த்தி சுகிர்தன் - கன்னன்குடா-மட்டு)
விஜயன் (சின்னத்தம்பி முருகமூர்த்தி-கோயில்போரதீவு-மட்டு)
2ம் லெப். துரைக்குட்டி (அடைக்கலம் தெம்மை -கற்கடந்தகுளம், வங்காலை - மன்னார்)

யாழ். காரைநகர்ப் பகுதியில் சிறிலங்காக்கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப். ரகுராம் (பழனிவேல் நந்தவரதன்-குலனை

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாளிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கிறோம்:

TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA

(இ-9053)

---

### இலவச ஆலோசனை

லண்டனில், A.C M A, Transport Marketing பட்டங்கள் பெற்றவர். இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தில் மேல்வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகிறார் ச. சுதிரமலைப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7951)

---

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கேசல் கவரிங் சோடனை நகைகள், லேஸ், நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதன பொருட்களைநிதான விலைக்கு, மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177 A, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-9071)

---

### ஆங்கில மருத்துவம்

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது; பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்:

(இ-9016)

---

க. பொ. த உயர்தரத்தில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்

## விரிவுரைகள்
## 16 - 4 - 94
## ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

முக்கியகுறிப்பு :- யாழ்ப்பாணம் பேராதனைப் பல்கலைக் கழகங்களினால் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இதற்கான விண்ணப்பப்படிவங்களை எம்மிடமிருந்து பெற்று விண்ணப்பிக்கலாம் (சி-9076)

---

## கெயின்ஸ்

(கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக)
(மருத்தித்துறை வீதி,)
கோப்பாய்.

**A/L 96 ஆரம்பம்: 11.04.94**
**திங்கள் பி. ப. 1 மணி**

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கியல் | D. SAM |
| வர்த்தகம் | பசில் |
| அளவையியல் | சயந்தன் |
| | சர்மா |
| தமிழ் | குழந்தை |
| இந்துநாகரிகம் | பாலா |
| அரசியல் | கியூபேட் |
| இந்துசமயம் | கிரிதரன் |
| புவியியல் | மோசேஸ் |

✻ 94ஆம், 95ஆம் ஆண்டுக்கான வகுப்புக்களும் நடைபெறும்.

(சி-9072)

---

(தியாகராசா ஞானவேல்)
மயிலிட்டி

தேசத்தின் விடுதலைக்கு உயிர் நிலைதான்
விலை என்ற மாவீரனே...
தலைவரின் உயர்ந்த சிந்தனையை
செயலுரு கொடுப்பதற்கு - நீ
அயராது உழைத்தாய்;

இடம் பெயர்ந்த மயிலிட்டி
கடற் தொழிலாளர் ஒருங்கிணைப்புச் சங்கம்

(7905)

---

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
27 . 09 . 1973

தமிழ் மண்ணுக்காக
10 . 04 - 1993

### கப்டன் நீலவண்ணன்-இம்ரான்
(அருளையா செந்தில்ராஜ்)

பள்ளிவாழ்க்கையிலே விடுதலை வேட்கைகொண்டவனே
நீண்ட நாள் கனவை நிறைவேற்றி வந்த எங்கள்
நீலவண்ணனே!
எம்மக்களின் விடிவுக்காக உறங்க மாட்டோம் என்ற
போது நீ உறுதியளித்தாய்
எங்கள் தலைவரின் வழி நடத்தலை வரலாயில் இங்க
ளப் படைக்கு புரியவைத்தாய்
நீ அங்கே உறங்கினாய் உன் இலட்சியம் எங்கள் உள்
ளத்தை வீச்சாக்கியது
உன்தன் இலட்சியத்தை மேலும் நாம் இந்நாளில் உறுதி
யாக்கி தொடர்கின்றோம்

- குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,
மானிப்பாய்.

(7975)

---

யாழ். காரைநகர்ப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்தின,

**லெப்.ரகுராம்** (பழனிவேல் நந்தவரதன்-குலனையூர், அராலி வடக்கு-வட்டுக்கோட்டை-யாழ்)

**லெப்.குட்டி** (செல்லையா இராஜேந்திரன்-நவகிரி, புத்தூர்-யாழ்)

இதேபகுதியில் இதே சம்பவத்தில் விழுப்புண் அடைந்தநிலையில் வீரச்சாவெய்திய.

**தேரு** (பராஜலிங்கம் குமாரதன்-புத்தூர்கிழக்கு-யாழ்)

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட மயிலவெட்டுவானைச் சேர்ந்த தமிழிளைஞன், மற்றும் ஜயங்கேணி வாகினான 2 இளைஞர்கள் உட்பட 8 தமிழர்கள் மற்றும் சித்தாண்டியைச் சேர்ந்த தமிழிளைஞன்,

1992-ம் ஆண்டு மட்டு புனானையில் அம்முகாமிலிருந்து தெக்கஞ்சேனை காவலரண்நோக்கிச் சென்ற இராணுவ ரோந்து அணிமீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்தின.

**சகாதேவன்** (சிவலிங்கம் புவனேந்திரன்-அரசடித்தீவு-மட்டு)

மட்டு-பிள்ளையாரடித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்தின,

**குகராஜன்/ரமேஸ்** (சந்திரசேகரம்பிள்ளை உதயன்-இருதயபுரம்-மட்டு)

1993-ம் ஆண்டு கொண்டமானாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.கபில்** (சின்னராஜா-தேவராஜன்-குச்சவெளி திருமலை)

**கப்டன் நீலவண்ணன்/இம்ரான்** (அருளையா செந்தில்ராஜ்-சுதுமலைவீதி, மானிப்பாய்-யாழ்)

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது சிறிலங்கா விமானப்படையினர் அச்சுவேலிப் பகுதியில் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் பலியான யாழ் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி மற்றும் எறிகணைவீச்சில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவரும், கப்பர்மலையைச் சேர்ந்த மாணவன் ஒருவரும், சரணவாய் மண்டானைச் சேர்ந்த ஒருவருமாக 04 பொதுமக்கள்;

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ-9069)

Wallur Branch Library

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L 1994 DEC.

**DAY CLASS**

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.04.1994**

விஞ்ஞானம் - திரு இரா. செல்வவடிவேல்
S. வாமன்
கணிதம் - திரு. இரா. அருட்செல்வம்
K. குணசிங்கம்
வரலாறும்
சமூகக்கல்வியும் - திரு. K.S. முத்துலிங்கம்
ஆங்கிலம் - திரு. தெய்வபாலன்
தமிழ், சமயம் - திரு. தமிழ்நம்பி
வர்த்தகம் - திரு. அருண்

- காலை 8.00 மணியிலிருந்து 1.30 மணி வகுப்புகள் நடைபெறும்;
- வாரத்தில் நான்கு வகுப்புகள்
- முழுப்பாடத்திட்டமும் பூர்த்திசெய்யப்படும்

(ஐ-9046)

# பதவி வெற்றிடம்

எமது பிரபல நிறுவனத்திற்கு திட்ட அலுவலர் பதவிக்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

**விண்ணப்ப முடிவு திகதி:- 25-04-94**

தகைமைகள்:-

- பொருளியல் சிறப்புப் பட்டதாரி
  அல்லது
- சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர சித்தியுடன் இத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள்.
- திட்டமிடல் திட்டக் கண்காணிப்பு வேலை செய்த அரசஊழியர்களுக்கு கல்வித்தகைமை விலக்களிக்கப்படும்;

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி;
பொது முகாமையாளர்,
பனை, தென்னை வள அபிவிருத்திப்பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
காங்கேசன்துறை வீதி,
தாவடி;

(சி-9073)

# சீமாட்டி புடவை அகம்

## மலிவு விற்பனை

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L DAY, EVENING, SAT - SUN CLASSES

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| விஞ்ஞானம் | கணிதம் | வரலாறும், சமூகக்கல்வியும் |
|---|---|---|
| திரு. J.R. சூரி | திரு. ஜெகன் | திரு. கோபி |
| ஆங்கிலம் திரு. விஸ்வநாதன் | தமிழ் திரு. சிவா, திருப்பதி | சமயம் திரு. கெங்கா, சங்கர் |
| | | வர்த்தகம் திரு. கருணாகரன் |

| DAY CLASSES | EVENING CLASSES | SAT - SUN CLASSES |
|---|---|---|
| (8.30 - 2.00) | (3.15 - 6.10) | (8.00 - 2.00) |
| ஆரம்பம்: 11.04.94 | ஆரம்பம்: 11.04.94 | ஆரம்பம்: 10.04.94 |
| திங்கள் காலை 8.30 மணி | திங்கள் மாலை 3.15 மணி | ஞாயிறு காலை 8.00 மணி |

○ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(ஐ-9059)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
DAY CLASSES (8.30 - 2.00)
ஆரம்பம்: 11.04.94 காலை 8.30 மணி
EVENING CLASSES (3.15 - 6.10)
ஆரம்பம்: 11.04.94 மாலை 3.15 மணி
SAT. SUN CLASSES (8.00 - 2.00)
ஆரம்பம்: 10.04.94 காலை 8.00 மணி

மாதாந்த பரீட்சை நடாத்தப்படும்.

# எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகாமையில்)
411/1 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்:

## OL DAY CLASS

கணிதம்: திரு. B.P பாஸ்கரன்
விஞ்ஞானம்: திரு. இரா. செல்வவடிவேல்
திரு. J.J. கொலின்ஸ்
சமூகக்கல்வி: திரு. K.S முத்துலிங்கம்
தமிழ்-சமயம் திரு K இராஜலிங்கம்
ஆங்கிலம்; திரு. C சத்தியமூர்த்தி
வர்த்தகம்: திரு. விக்கி

ஆரம்பம்
12.04.1994 செவ்வாய் மு ப 8 மணி

★ கணிதம் - விஞ்ஞானம் கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்;
★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்

(ஐ 9061)

# எடிசன் அக்கடமி

(கொக்குவில் இந்து, குளப்பிட்டிச்சந்தி இடையில்)
27, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்

## O/L DAY CLASS

ஆரம்பம்
12-04-1994 செவ்வாய் மு. ப. 8 மணி
எமது திறமை மிகு ஆசிரியர் குழு

கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்
விஞ்ஞானம்: திரு. J. R. சூரி
திரு J. J. கொலின்ஸ்
சமூகக்கல்வி: திரு. க. கோபி
தமிழ் - சமயம்: திரு K. இராஜலிங்கம்
ஆங்கிலம்: திரு C. சத்தியமூர்த்தி
வர்த்தகம்: T. தர்மராஜன்

குறிப்பு:

- பாடத்திட்டம் பூர்த்தியாவதுடன் கடந்தகால வினாக்கள் உடன் மீட்கப்படும்;
- கணிதம்- விஞ்ஞானம் கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்;
- கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்;

(ஐ-9062)

## மலிவு விற்பனை

புத்தாண்டை முன்னிட்டு
அனைத்துப் புடவை ரகங்களும்
மலிவு விற்பனையில்

**சீமாட்டி புடவை அகம்**

இம்மாதம் 13ஆம் திகதி வரை இம் மலிவு
விற்பனை தொடரும்!

**இன்றே வருகை தாருங்கள்**

## சீமாட்டி புடவை அகம்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-9064)

## பெற்றோர்களே !

உங்கள் அன்புக் குழந்தைகளுக்கு மலரும் புத்தாண்டில், புத்தாண்டுப் பரிசாக அறிவியல் நூல்களை வேண்டி பரிசளியுங்கள்.

1. எதனாலே எதனாலே
2. அணுவிலிருந்து ஆகாயம்வரை
3. வரலாற்றில் அறிவியல்
4. வாழ்வே அறிவியல்
5. நீ எப்படித் தோன்றினாய்
6. பறக்கப் பயின்ற கதை
7. அணுசக்தி முன்னேற்றப் பாதையா? முட்டுக்கட்டையா?
8. இயற்கை சமுதாயம் விஞ்ஞானம்

**துளிர் 'விற்பனையாகும்**

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

(7977)

ஆரம்பம்: 10.04.94 காலை 8.00 மணி

- மாதாந்த பரீட்சை நடாத்தப்படும்.
- கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது

(கி-9025)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**AL 96** கலை, வர்த்தகம்

**மற்றுமோர் புதிய பிரிவு**

| | |
|---|---|
| பொருளியல் | வரதராஜன் |
| அளவையியல் | S.S. மனோகரன் |
| வர்த்தகம் | பசில் |
| கணக்கியல் | சௌந்தி |
| தமிழ் | மீரா |
| இந்துநாகரிகம் | பாலா |
| இந்துசமயம் | தாஸ் |
| புவியியல் | பிரபல ஆசிரியர் |
| அரசியல் | பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவ சமயம் | நிரஞ்சன் |
| நாடகமும் அரங்கியலும் | சிவா |

ஆரம்பம்: **16-04-94** சனி காலை 7.00

குறிப்பு:
- முதலாம் பிரிவிற்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
- பிரிவு இரண்டிற்கு முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
- வேறு பிரிவுகள் ஆரம்பிக்கப்படமாட்டாது

(கி-9068)

இருந்து போதிக்கப்படும்.

(கி-9062)

## வாசித்தீர்களா?

# துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ்

இப்பொழுது பின்வரும் கடைகளில்
விற்பனையாகிறது

யாழ்ப்பாணத்தில் - வசந்தம், தமிழ்த்தாய், யாழ் புத்தக சாலை, பூபாலசிங்கம்
சுன்னாகத்தில் - துர்க்கா ஸ்ரேசனறி
பருத்தித்துறையில் - உதயன் புத்தகசாலை
சாவகச்சேரியில் - சோதி புத்தகசாலை

மேலதிக விபரங்களுக்கு:

**வசந்தம் புத்தக நிலையம்**

புதிய பஸ் நிலையம் முன்
405, அருச்சுனா வீதி
யாழ்ப்பாணம்.

(7976)

# குடியிருப்பு புனரமைப்பு செய்யப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள நவாலி மயூரன் குடியிருப்பில் தற்போது வீடுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன விடுதலைப்புலிகளின் தீவககோட்ட அரசியல் துறையினருடன் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினர் இணைந்து மேற்கொள்ளும் இப் புனரமைப்பையடுத்து நெருக்கமாக இருந்த வீடுகள் அகற்றப்பட்டு குடும்பம் ஒன்றிற்கு ஒரு பரப்புக் காணியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. தீவகத்தைச் சேர்ந்த 59 குடும்பங்களின் 262 பேர் இக் குடியிருப்பில் தங்கியுள்ளனர்.

## மூக்குக்கண்ணாடி பெறலாம்

றெட்பானா நிறுவனத்தில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு 2-11-93லும் அதற்கு முன்னரும் விண்ணப்பித்தவர்கள் அலுவலக நாட்களில் வந்து பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

இம் மூக்குக் கண்ணாடிகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும்போது திருகோணமலையில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டமை தெரிந்ததே.

# பாடசாலை மாணவ சீருடை ஜூனில் விநியோகம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இவ் வாண்டு சீருடை ஜூன் மாதத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி சேவைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

சுமார் நாற்பத்தி இரண்டு லட்சம் மாணவர்களுக்கு இச் சீருடை வழங்கப்பட இருப்பதாகவும் இதற்காக நாற்பத்தி ஒரு கோடி ரூபா செலவு செய்யப்படும் என்றும் தேவையான சீருடைக்கான துணிகளை சீனாவில் இருந்து இறக்குமதிசெய்யப்படஇருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதற்கான முதற் கட்ட சீருடை தொகை இம் மாதம் 15 ம் திகதி எடுத்து வரப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கடற்பரப்பில் கடற்படை பீரங்கித் தாக்கு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலினால் இப் பகுதி அரைமணி நேரமாக அதிர்ந்தவண்ணமிருந்தது.

இக் கடற்பரப்பின் மீது கடந்தவியாழன்றுஇரவு 9 15 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் குடியிருப்புக்கள்மீது பீரங்கித் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

தொண்டமனாறு முதல் கற்கோவளம் வரையில் கடற்படையினரின் தாக்குதல்கள் தொடர்ந்தது. கடலில் இருந்து ஏவிய பீரங்கிகள் அனேகமானவை குடியிருப்புகளில் விழுந்து வெடித்தன. பருத்தித்துறை செம்மட்டி ஆலயத்தில் நடைபெற்ற உற்சவ வெளிச்சத்தைக் கண்டு தாக்குதல் நடாத்ததாகவும் சொல்லப்படுகிறது.

அதே சமயம் வெற்றிலைக்கேணியிலிருந்து பலாலிக்குச் செல்லும் கடற்படைப்படகுக்கு 'புக்காரா' விமானம் தினமும் காலையில் பாதுகாப்பு வழங்கி வருகிறது. (போ)

# மக்கள் வங்கிக்கிளை திறக்க மன்னாரில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் பெருநிலப் பரப்பில் மக்கள் வங்கிக் கிளை ஒன்றை செயல்பட வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெருநிலப் பரப்பிலுள்ள பொது மக்கள் மன்னார்த் தீவினுள் சென்று சேவை பெறுவதில் உள்ள சிரமத்தை போக்கு முகமாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்த மக்கள் வங்கிக் கிளை மடுப் பகுதியில் செயல்பட வைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

முருங்கனில் மூடப்பட்ட மக்கள் வங்கிக் கிளையையே நாம் விரைவில் மடுவில் செயல்படவைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

விவசாய மக்களுக்கு கடன் வழங்கல் வேலையை மேற்கொள்வதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மன்னார்த் தீவிலிருந்து பெருந்தொகை பணம் எடுத்துவருவதில் இராணுவம் விதித்துள்ள தடையை இதனால் சமாளிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (தி) (க)

# அம்பிலாந்துறை முகாமில் இரா. சிப்பாய் தற்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாஞ்சிக்குடி பெலிஸ் பகுதியில் அம்பிலாந்துறை இராணுவ முகாமில் இருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

முகாம் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தபோது தன்னிடமிருந்த துப்பாக்கியினால் தனக்குத்தானே சுட்டு இவர் தற்கொலை செய்து கொண்டார்

மேற்படி சம்பவம் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றதாக தெரிய வருகின்றது.

லீவில் செல்ல அனுமதிக்குமாறு இவர் முகாம் பொறுப்பதிகாரியிடம் அன்றைய தினம் கேட்டதாகவும் இதற்கு அவர் மறுப்பு தெரிவித்ததை தொடர்ந்து இம் முடிவுக்கு இவர் வந்ததாகவும் நம்பப்படுகின்றது.

## 41-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
28-12-1972

தமிழீழ மடியில்:
01-03-1994

### கப்டன் ஆண்டகை/கந்தையா
(தியாகராசா ஞானவேல்-மயிலிட்டி)

புயலான பெருவீச்சு

நீ... வித்தியாசமான விடுதலை வீரன்
இந்த சத்திய யுத்தத்தில் உன் வீரத்தால்
இந்த தேசம் மகுடம் சூடிக் கொள்கிறது
எதிரியின் முள் வேலிக்குள்—நீ
எண்ணுறங்கிய பொழுதுகளில்—துப்பாக்கி
சுவட் டொலிகள் தாலாட்டு பாடியிருக்கும்
அப்போது உன் தாயின் நினைவுகள்
தலைகாட்டிப் போயிருக்கும்.

உன் விழிகளில் லட்சியக் கனவுகள்
உன் எண்ண மெல்லாம் இலக்கின் தெரிவு
உன் இறுதி மூச்சுக் காற்று
புயலான பெரும் வீச்சு.

10-04-94 அன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் சகோதரர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி;-
நாகர்கோவில்

— குடும்பத்தினர், நண்பர்கள்

(7980)


பாவனையாளருக்கு

புதிய ஓர் நற்செய்தி

எம்மிடம்,

- தரமான எவர்சில்வர், அலுமினிய, பிளாஸ்ரிக் பொருட்கள்.
- கோயில் தேவைகளுக்கான சகல வகைப் பொருட்கள்.
- பரிசுப்பொருட்கள் (வெவ்வேறு அளவுகளில்)

மேலும்

★ கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து [வெறமின்]
ஆகியவற்றை நியாய விலையில் என்றும் எம்மிடம் பெற்றிட இன்றே நாடுங்கள்.

சிவன் மாளிகை

166, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

(இ-9063)

சோழன் நெல் அரிசி வாணியம்

நாட்டரிசி கிலோ- 27 ரூபா 47 சதப்படி (67 கிலோ) மூடை 1840 ரூபாவுக்கு மொத்தமாகவும் நெல் (69 கிலோ) மூடை 1275 ரூபாவுக்கு மொத்தமாகவும்

மற்றும்

★ உடையல் பச்சை (67கிலோ) மூடை 1750 ரூபா விலையிலும்
★ திட்டல் பச்சை (67கிலோ)மூடை 1825 ரூபா மற்றும்
★ தவிடு நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள

சோழன் நெல் அரிசி வாணிபம்

பலாலி வீதி, திருநெல்வேலி
கிளை, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(இ-9070)

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

அறிவித்தல்

எதிர்வரும் வருடப்பிறப்பை முன்னிட்டு 10-4-94 ஞாயிறு தொடக்கம் 13-4-94 வரை இரவு 7 மணிக்கு பின்னரும் நிலையங்கள் திறந்து தொழில் புரிவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு :- எமது நிலையங்கள் காலை 7 மணிக்கு


## 41-ம் நாள் நினைவஞ்சலி

10 . 04 . 94



NEPTUNES

விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு :- எமது நிலையங்கள் காலை 7 மணிக்கு திறந்து மாலை 7 மணிக்கு மூடப்பட வேண்டும் என்ற விதி 14-4-94 தொடக்கம் மீண்டும் தொடர்ந்து அமுல் ஆகும்.

கௌரவ செயலாளர்

(7985)

---



தாய் மடியில்
01 - 01 - 1971

தமிழ் மடியில்
01 - 03 - 1994

## கப்டன் அன்புச்செல்வன் (ரகு)
### (நாகமுத்து இராசகுமார்)

புத்தூர் கிழக்கு

வீரத்தின் விளை நிலத்தில் வீழ்ந்ததால் நீ
விதையானாய்
விடுதலையின் பெருமரத்தின் நீ விழுதானாய்
விடியலுக்காய் ஏங்கி நிற்கும் மக்களுக்கு நீ
விளக்கானாய்
உன் இழப்பால் விம்மியழும் எங்கள் நெஞ்சில் நீ
அழியாத நினைவானாய்!

01 - 03 - 94 அன்று கௌதாரிமுனையில் இராணுவத்தினரின் நடமாட்டத்தை அவதானிக்கச் சென்ற போது எதிர்பாராமல் ஏற்பட்ட நேரடி மோதலில் இவரோடு வீரச்சாவை தழுவிக்கொண்ட,

| | |
|---|---|
| கப்டன் கரிகாலன் | லெப். துரையப்பன் |
| கப்டன் கந்தையா | லெப். வண்ணன் |
| கப்டன் அழகநம்பி | 2-ம் லெப். கேது |
| லெப். மயூரன் | |

ஆகிய மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 41-வது நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (7984) - குடும்பத்தினர்

---

# NEPTUNES

COLLEGE

NELLIADY | KARAVEDDI

| A/L 96 | O/L |
|---|---|
| கலை வர்த்தக வகுப்புக்கள் | துரித மீட்டல் வகுப்புக்கள் |

ஆரம்பம்

| 11-04-94 மாலை 4.00 மணி | 10.04-94 காலை 10.00 மணி |
|---|---|
| அளவையியல் திரு. நவம் | கணிதம் :- திரு யோகேந்திரம், திரு. கௌத் |
| பொருளியல் :- திரு சிறீரங்கநாதன் | விஞ்ஞானம் :- திரு. ஜெயானந்தம் |
| கணக்கியல் :- திரு. நந்தகுமார் | தமிழ் ) சமயம் ) திரு. சிவலிங்கராசா |
| தமிழ் :- திரு. நவம், திரு. ரூபன் | சமூகக்கல்வி :- திரு. மனோகரன் |
| இந்து சமயம் ) இந்துநாகரிகம் ) செல்வி குமுதினி | ஆங்கிலம் :- திரு. செல்வநாதன் |
| அரசியல் ) புவியியல் ) திரு. மனோகரன் | வர்த்தகமும் ) கணக்கியலும் ) திரு. ராஜகுலசிங்கம் |
| கிறிஸ்தவ ) நாகரிகம் ) திருமதி ஜெயந்தினி | |

- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
- மாதாந்த பரீட்சைகள் நடைபெறும்

(வி9065) - நிர்வாகி

---

பொதுமக்களுக்கும்
பார்வையாளர்களுக்கும்
பங்குபற்றுவோருக்கும்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
பவளவிழா நிர்வாகத்தின்

## அன்பான அறிவித்தல்

10.4.94 இல் நடைபெற இருந்த
மாட்டு வண்டிச்

# சவாரிப் போட்டி

மழை காரணமாக

13.4.94 மாலை 2.30 மணிக்கு
அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில்

நடைபெறும்

அனைவரும் வருக பங்கு பற்றுக — நிர்வாகம்.

(வி 8074)

Nallur Branch Library

## சிந்தனைக்கு

நாட்டு மக்களை வழிநடத்திச் செல்வதை எளிதாக்கி-
வலுக்கட்டாயம் செய்வதைக் கடினமாக்கி,
ஆள்வதை எளிதாக்கி-
அடிமைப்படுத்துவதை இயலாததாக்குவது - கல்வி
- ப்ரோகம் பிரபு.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 3032
தபால் பெட்டி எண் 05

## விடுதலை இன்றி கல்வி கிட்டாது

"தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்கங்களையும், இலக்குகளையும் மாணவ சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும்; இந்தப் புரிந்துணர்வை வளர்த்து மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும்." இவ்வாறாக தமிழீழ மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான அறிவுறுத்தல் வடிவிலான கோரிக்கை ஒன்றைத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்துள்ளார்.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்காக நடத்தப்பட்ட பாராட்டுவிழா தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள இச்செய்தியில், தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும், சுபீட்சத்திற்கும் தமிழீழ தேசிய விடுதலையின் அவசியம் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய இனமானது திட்டமிட்ட வகையில், மேற்கொள்ளப்படும் சிங்களப் பேரினவாதத்தின் இன ஒடுக்குதலுக்கு உள்ளாகி வருகின்றது. இவ் ஒடுக்குமுறையானது தமிழர் தேசியத்தை சிதைத்து விடுவதற்கென சகல துறைகளிலும், பல வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில், குறிப்பாகத் தமிழ்மக்களின் கல்வியை அழித்து விடுவதற்காக சிறிலங்கா அரசு நீண்டகாலமாகவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது; அவ்வாறு மேற்கொள்வதற்கு நீண்டகாலமாக தமிழர்களின் வாழ்வின் ஆதாரமாக கல்வி இருந்து வருகின்றமை முக்கிய காரணமாகும். இதேவேளை, இப் புறக்கணிப்பு - ஒடுக்குமுறை ஐம்பதுகளில் தொடங்கி இன்றுவரை நீடித்துக் கொண்டே இருக்கின்றது இது சிங்கள மொழித் திணிப்பில் இருந்து தரப்படுத்தல் வரை எனப் பல வடிவங்களில் நீடிக்கின்றது.

## "நீங்கள் காட்டுக்குச் செல்லுங்கள்" இலங்கையருக்கு பிரிட்டன் எம்.பி.பதில்

(லண்டன்)
"நீங்கள் மீண்டும் காட்டுக்குச் செல்லுங்கள்" என்று சிறிலங்காவில் பிறந்தவரும், இங்கிலாந்தில் பாராளுமன்ற உறுப்பினருமான நிரஞ்சன் தேவ் ஆதித்யவைப் பார்த்து அவரின் தொகுதியைச் சேர்ந்தவர் ஒருவர் கூறியதாக இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இனக் குரோதம் மற்றும் வன்செயல் என்ற மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அந்த மசோதாவுக்கு ஆதரவு தேடும் வகையில் கன்ஸர்வேட்டிவ் கட்சி எம்-பி ஹாட்லிபூத் இந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்திப் பேசினார். நிரஞ்சன் தேவ் ஆதித்யவும் அதே கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது,

பதிலளித்துப் பேசிய ஆதித்ய, இரண்டு உலகப் போர்களிலும் ஏழு லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் (இலங்கையரும் சேர்ந்து) உயிரிழந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? இறந்தவர்களில் இருவர் எனது நெருங்கிய உறவினர் நிலைமை அவ்வாறிருக்க நீங்கள் எழுந்து நின்று இப்படிப் பேசுகிறீர்கள்,

இன்று இனவாதம் மற்றும் பாஸிச அலை ஐரோப்பா அடங்கலாக உலகெங்கும் அடிக்கிறது இந்த மசோதாவை எமது கவனத்துக்கு எடுத்துக் கொண்டு ஆதரிப்பதன் மூலம் இந்த நாட்டில் (இங்கிலாந்து) தவிர்க்கப் படவேண்டிய விஷயங்கள் குறித்துக் கருத்து வெளியிடலாம் என்றார்.

எனினும் இந்தச் சட்ட மூலம் இரண்டாவது வாக்கெடுப்பின் போது தோல்வியுற்றது.

## பாகிஸ்தானை அமெரிக்கா கட்டாயப்படுத்தக் கூடாது

### பாக். பிரதமர் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானிலுள்ள அணுசக்தி அமைப்புகளை சர்வதேச கண்காணிப்புக்கு உள்ளாக்குவது தொடர்பாக அமெரிக்கா பாகிஸ்தானைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோ கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், எப் 16 ரக போர்விமானங்கள் வழங்கப்படுவதற்குப் பதிலாக அணுசக்தி அமைப்புக்களை பார்வையிடுவதற்கு பாகிஸ்தான் வசதி செய்து கொடுக்காது எனவும் தெரிவித்தார்;

## தற்கொலை குண்டு தாக்குதலில் எட்டு இஸ்ரேலியர் பலி

(டெல்அவிவ்)
இஸ்ரேலில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் எட்டு இஸ்ரேலியர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் வடபகுதி நகரமொன்றில் குண்டு பொருத்தப்பட்ட கார் ஒன்று பயணிகள் பேருந்து ஒன்றுடன் மோதிய போது குண்டு வெடித்தது. இக் குண்டுவெடிப்பில் எட்டு இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர் மற்றும் 30பேர் காயமடைந்தனர்.

ஏப்ரோன் மசூதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## கர்ப்பப்பை புற்று நோய்க்கு வரும் நூற்றாண்டில் மருந்து

### உலக சுகாதாரதாபனம் தெரிவிப்பு

ஆண்டுதோறும் மூன்று இலட்சம் பெண்களின் இறப்பிற்கு காரணமாக இருக்கும் கர்ப்பப்பை புற்றுநோய்க்கான மருந்து அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்குமென்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நோயைத் தடுப்பதற்கான ஆய்வுகளை தற்சமயம் பல நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. அதே சமயம் உடல் நலக் கல்வியூடாக முறைப்படி சுகாதார விதிகளை பிரபலப்படுத்துவதன் மூலமும் வறியநாடுகளில் பல உயிர்களை பாதுகாக்க முடியுமென்று உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை இந்நோயை நேர காலத்துடன் கண்டு பிடிக்கும் கருவிகள் முன்னேற்றம் கண்டுள்ள கைத்தொழில் நாடுகளில் பயன்படுத்தப் பட்டு வருகின்றன எனினும் பல வறிய நாடுகளில் இந்த வசதி கிடையாது.

வளர்முக நாடுகளிலேயே கர்ப்பப்பை புற்று நோயால் அனேகம் பேர் மரணமடைகின்றனர் எனவே நேரகாலத்துடன் இனம் கண்டு கொள்ளும் முறைகள் பற்றி வளர்முக நாடுகளில் உள்ள பெண்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான இயக்கம் ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொள்ளவுள்ளது.

## பாக்.இற்கு எப் 16 விமானங்கள் அமெரிக்காவிடம் இந்தியா கவலை

(டில்லி)
பாகிஸ்தானுக்கு எப் 16 ரக போர் விமானங்களை அமெரிக்கா வழங்குவதற்கு முடிவு செய்திருப்பது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இத்தகைய நவீன ஆயுதங்களை பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராகவே பயன்படுத்தி வந்துள்ளது என்றும், அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தமும் வர்த்தகம் தொடர்பான அமெரிக்க திட்டங்களும், ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது என்றும் புதுடில்லிக்கு வந்துள்ள அமெரிக்க வெளிநாட்டு உதவி அமைச்சர் டல்பொட்டிடம் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுச்சூழல், மற்றும் சமுதாயச் சிக்கல்கள் போன்ற புதுவகையான தடைகளை வர்த்தகத்தில் கொண்டு வந்தால் ஏற்கனவே பேசி முடிக்கப்பட்டுள்ள உருகுவே சுற்றுப் பேச்சுகள் ஆபத்தில் முடியும் என்று இந்தியா அமெரிக்க அமைச்சரிடம் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

இப் பேச்சு வார்த்தையில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் பின்னர் கூறுகையில் இந்தியாவின் கவலையைப் புரிந்து கொள்வதாகவும் பாகிஸ்தானும், காஷ்மீரும் சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில்பேச்சுவார்த்தை நடத்தி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென விரும்புவதாகவும். தெரிவித்தனர்.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவை அமெரிக்காவிற்கு வரவேண்டுமென்ற அதிபர் கிளிண்டனின் அழைப்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இருப்பதாகவும், பரஸ்பரம் வசதியான திகதிகளில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படலாமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## இராணுவ தாக்குதலினால் இரு மீனவர் காயம்

(நல்லூர்)
மண்டைதீவுக் கரையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் கடந்த வியாழன் அதிகாலை 3 மணியளவில் நடாத்திய துப்பாக்கி வேட்டில் குருநகர் மீனவர் துரைசிங்கம் அற்புதநாதன் (வயது 43) வயிற்றில் பலத்த காயத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இவருடன் தொழிலுக்கு சென்ற ராசு றாபட் (வயது 12) காலில் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சிறுத்தீவுக் கடலில் இவர்கள் ஜே றஜீஸ் என்பவரின் மீன்பிடிப் படகில் டிஸ்கோ வலை மூலம் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடித்த சமயம் மாட்டுவெடிப்பிட்டி என்னும் இடத்தில் உள்ள இராணுவ முகாமை நோக்கி நடந்து சென்று இவர்களை நோக்கி பல தடவை சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17),(21),(ஐ)

## பல்கலை ஊழியரின் சம்பளம் மாற்றியமைப்பு

(கொழும்பு)
அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத் திட்டம் ஒரு மாத காலத்திற்குள் மாற்றியமைக்கப்படும் என தெரியவருகிறது.

அதிகரித்த கொடுப்பனவினை ஏனையோருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை பல்கலைக்

## பிணை வழங்கப்பட்ட விடயத்தில் அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா?

### ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன் அறிக்கை

(கொழும்பு)
இது தொடர்பாக அவர் போக்கை திசை மாற்றுகின்

ங்கி இன்றுவரை நீடித்துக் கொண்டே இருக்கின்றது. இது சிங்கள மொழித் திணிப்பில் இருந்து தரப்படுத்தல்வரை எனப் பல வடிவங்களில் நீடிக்கின்றது.

தாயகம், மொழி, கலை, பண்பாடு என்பவற்றுடன் கல்வித் துறையையும் சேர்த்துச் சிதைப்பதன் மூலம் தமிழர் தேசியத்தைச் சிதைத்து விடுவதே சிறிலங்கா அரசின் நோக்கம் ஆகும். இந்நிலையில், தமிழ் மக்களின் கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமானால் தமிழரின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுதல் அவசியமானதாகும். இதனை தலைவர் பிரபாகரன் "எமது தேசம் விடுதலை பெற்று நிலையான அமைதியும் உறுதியான அரசும் தோன்றும்போதுதான் நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்குக் கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித் துறையையும் சீரான முறையில் சீரமைத்து எமது நாட்டின் நலன் பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும்" எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், எமது பிரதேசம் கல்வியில் மேம்பாடு அடைய வேண்டுமானால் தேசிய விடுதலையானது முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதோடு, விரைவில் விடுதலை பெறவும் வேண்டும். அப்பொழுதே எமது அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் தேவையான கல்விக் கொள்கையை உருவாக்கி வழிநடத்த முடியும்.

இதனையே மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும், அதனை மாணவர்களுக்கு உணர்த்துவதற்கு ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும் எனவும் தலைவர் பிரபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார். அதாவது, இன ஒடுக்குமுறைக்குள்ளாகிய இன்றைய நிலையில் தேசிய விடுதலை இல்லாமல் கல்வி இல்லை என்பதும், கல்வி இல்லாமல் தமிழ்மக்களுக்கு வளர்ச்சி இல்லை என்பதுமே உண்மையாகும். இவை ஒன்றில் ஒன்று நேரடித் தொடர்புபட்டுள்ளன.

இந்நிலையில், மாணவர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்கைப் புரிந்து கொள்வதோடு மட்டுமல்ல அதனை அடைவதற்கான வழிவகைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்க வேண்டும். ஏனென்றால், தமிழ் தேசிய இனத்தின் விடுதலையிலேயே தமிழ் மாணவரின் கல்வியும், தமிழ் இனத்தின் சுபீட்சமும் தங்கியுள்ளது. ஆனால், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று யாராவது மாணவர்கள் கருதுவார்களே ஆனால் அவர்கள் தமது வாழ்வையும் இனத்தின் எதிர் காலத்தையும் உணர மறந்தவர் என்றே சொல்ல முடியும்.

டம் ஒரு மாத காலத்திற்குள் மாற்றியமைக்கப்படும் என தெரியவருகிறது.

நிரந்தரமாக்கப்பட்டுள்ள சேவையாளர்களுக்குமட்டும் வழங்கப்படும் 10 சதவீத

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா கேட்டுள்ளார்.

## மே நாளை சோக நாளாக பிரகடனம் செய்ய வேண்டும்

### சிறிசேன குரே கேட்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மரணமடைந்த தினமான மேதினத்தை சோக நாளாக பிரகடனப்படுத்தி அன்றைய நிகழ்ச்சிகளைரத்து செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பிரேமதாசா ஆதரவாளருமான சிறிசேன குரே வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கட்சிப்பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரேமதாசாவின் மீது எவராவது குற்றம் சுமத்தினால் அது ஐ.தே.கவின் மீதானது என்றே மக்கள் கருதுகின்றனர். அந்தளவிற்கு அவர்கள் கட்சியையும் பிரேமதாசாவையும் ஒன்றாகவே கருதுகின்றனர் என்றார்.

## வயிற்றோட்டத்திற்கு 413 பேர் இலக்காகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் கடந்த மூன்று மாதத்தில் வயிற்றோட்டத்திற்கு 413பேரும் நெருப்புக்காய்ச்சலுக்கு 283 பேரும் செங்கண்மாரிக்கு 35 பேரும், இலக்கானதாக வாராந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது

மேற்படி நோய்க்கிலக்கானவர்களின் எண்ணிக்கை வைத்திய அதிகாரிகள் பிரிவுரீதியாக வருமாறு;

கோப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் வயிற்றோட்ட நோய்க்கு 19பேரும் செங்கண்மாரிக்கு 4பேரும் நெருப்புக் காய்ச்சலுக்கு 40 பேரும் இலக்காகியுள்ளனர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வயிற்றோட்டத்திற்கு 38 பேரும் நெருப்புக்காய்ச்சலுக்கு 25பேரும் இலக்காகியுள்ளனர். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வயிற்றோட்டத்திற்கு 20 பேரும் நெருப்புக் காய்ச்சலுக்கு 79 பேரும் செங்கண்மாரிக்கு ஒருவரும் இலக்காகியுள்ளனர். மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நெருப்புக் காய்ச்சலுக்கு 135 பேரும் வயிற்றோட்டத்திற்கு 28 பேரும் இலக்காகியுள்ளனர். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்வயிற்றோட்டத்திற்கு201 பேரும் நெருப்புக்காய்ச்சலுக்கு 99பேரும் செங்கண்மாரிக்கு 31 பேரும் இலக்காகியுள்ளனர்,

பொதுவாக இந் நோய்க்கு தனி நபர் சுகாதாரம் பேணப்படாமையும் மலசல கூடங்கள் தகுந்த முறையில் பயன் படுத்தப்படாமையும் சுத்தமான குடிநீர் வசதியின்மையுமே காரணம் என தெரிவிக்கப்பட்டது. (வி)

## ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் அறிக்கை

(கொழும்பு)

எனக்கு பிணை வழங்கப்பட்ட விடயத்தில்எவருக்காவது அரசியல் உள்நோக்கம் இருந்ததா என்பதில் நாம் அக்கறை கொண்டிருக்கவில்லை என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் கூறியுள்ளார்

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தேசிய அரசியலிலும், மலையக அரசியலிலும் பல திருப்பங்களும் மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் மலையக மக்கள் முன்னணியும் தனது அரசியல் நிலைப்பாட்டின் போக்கை திசை மாற்றுகின்றது என்ற கருத்தை நாம் மறுக்கிறோம்.

நாம் கைது செய்யப்பட்டதிலிருந்து பிணை வழங்கப்படல் வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கின்றோம் இது 33 மாதங்களுக்குப்பின் தற்போது சாத்தியமாகியிருப்பது குறித்து நாம் திருப்தியடைந்தாலும் நீதிமன்றின் மூலம் குற்றமற்ற நிரபராதியாக சட்டப்படி விடுதலை செய்யப்படுவதையே அரசியல் கௌரவமாக கருதுகின்றோம்.

கடந்த மூன்று வருடங்களாக தடுப்புக்காவலில் இருந்து வழக்கு இறுதிக் கட்டத்தை அடையும் இந்த நேரத்தில் எனது அரசியல் கௌரவத்தைப் பணயம் வைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை

மலையக மக்கள் முன்னணி தனது கொள்கைகளிலிருந்தும், அதற்கான செயற்திட்டங்களில் இருந்தும் எப்போதும் மாறப்போவது இல்லை எனவும் தெரிவித்தார்

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

1994-4-10 -ஞாயிறு இரவு

8 01ற்கு- அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "பூபதியின் தியாகம் புதுமையானது"

8 10ற்கு- யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "விடுதலைக்கான முன் பாய்ச்சல்"

8.30ற்கு-செய்திகள்

8 40ற்கு - தொடர் நாடகம் இலங்கை மண் 21 ஆம் அங்கம்

1994 4-11 -திங்கள் காலை

7.02ற்கு- மாவீர வணக்கம்

7. 15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "தமிழர்கள் போற்றும் தமிழன்னை பூபதி"

7. 25ற்கு - மணி ஆரம்

7.45ற்கு- செய்திகள்

7.50ற்கு-பத்திரிகைச் செய்திகள்

7.55ற்கு - தாயகப் பாடல்கள்

## சத்தியபிரமாணம் நாளை செய்கிறார்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் நாளை திங்கட்கிழமை காலை பத்து மணியளவில். மாகாணசபை உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ள இருக்கின்றார், மாகாணசபை சபாநாயகர் சரத் கொங்காகே முன்னிலையில் இப்பதவிப் பிரமாண வைபவம் இடம்பெறும் என்று மலையக மக்கள் முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பங்கு இலாபத் தொகை இவ் வருடம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

'யூனிட் ட்ரஸ்ட் பங்குகள் கொள்வனவு செய்தவர்களுக்கான பங்கு இலாபம் அதிகரிக்கப்பட்டு இருப்பதாக இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பங்கு இலாபம் சென்ற வருடத்தில் எண்பது சதமாக இருந்ததாகவும், ஆனால் இந்த வருடத்தில் இந்த இலாபம் இரண்டு ரூபாவாக வழங்கப்படும் எனவும் சென்ற வருடத்தை விட இவ் வருடத்தில் ஒரு ரூபா இருபது சதம் அதிகரித்து இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த யூனிட் ட்ரஸ்ட் திட்டத்தில் முதலீடு செய்ய இருப்பவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் முதலீடு செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அன்பளிப்பு

யாழ். மத்திய கல்லூரியின் வியாசமூகம் சுதுமலை தெற்கு பொ. இராசலிங்கம் என்பவருக்கு முச்சக்கர சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

# கடல் வலய தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலிலுள்ளது

## யாழ். அரசாங்க அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

பாதிப்படைந்த மீனவர்களுக்கான நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் என்று கொழும்பிலிருந்து திரும்பிய யாழ் அரச அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடல் வலயத் தடைச் சட்டம் தொடர்ந்து அமுலிலேயே உள்ளது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

இது சம்பந்தமான புதிய முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட மாதக் கொடுப்பனவுடன் அடுத்தடுத்த மாதங்களுக்கு உரிய நிவாரணமும் வழங்கப்படும்.

ஆயினும் புதிய அறிவிப்பிற்கிணங்க அந்தந்த மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதிப்படைந்த மீனவர் நிவாரணக் கொடுப்பனவு சம்பந்தமான குழப்பம் தீர்ந்ததாக தெரிவிக்கப்பட்ட அதே வேளையில் கடல் வலை தடைச்சட்டம் நீக்கப்பட்டமை சம்பந்தமான செய்திகள் எனையும் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்ந்து அமுலில் இருக்கும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (தி) (ஒ)

## கோமாரியில் தபால் பொதிகள்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத் தபாலகங்களுக்கு நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'கோமாரி' கப்பலில் 270 தபால் பொதிகள் வந்துள்ளன. இத்தபால் பொதிகள் நாளை இறக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை உரியவர்களுக்கு விநியோகம் செய்யப்படுமென அறிய முடிகிறது. (கோ)

# கொழும்பில் தீவிர பாதுகாப்பு உஷார் நிலையில் படைகள்

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்புக்களையடுத்து சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் 24 மணிநேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கூறியுள்ளார்.

பாதுகாப்புச் சோதனைகளை நடத்தும் வெவ்வேறு பிடங்களைச் சேர்ந்தவர்களின் நடமாட்டம், கவனிப்பாரற்று இடக்கும் பொதிகள் ஆகியவை பற்றி படையினருக்கு பொதுமக்கள் அறிவித்தரவேண்டும் எனவும் அடையாள அட்டைகளை எப்போதும் மக்கள் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இக் குண்டு வெடிப்புகளை அடுத்து கொழும்பு நகரை விட்டு வெளியேறும் சகல பாதைகளிலும் சோதனைகள் கடுமையாக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

# கொழும்பு - யாழ். கடுகதி தபாற் சேவை ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கொழும்பு துரித தபாற்சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டும் யாழ். குடாநாட்டில் இயங்கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலியவற்றின் நன்மைகருதியும் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இத்துரித தபாற்சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கப்பல் "பினம் போயன்" மூலம் இவ் யாழ்-கொழும்பு தபாற்சேவை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தபாற்சேவை மூலம் அனுப்பப்படும் தபாற்பைகள் பின்வரும் சேவைகளை உள்ளடக்கும். அதாவது கடுகதிக் கடிதங்கள், வெளிநாட்டு விமானக்கடிதங்கள், தபால் மூலம் அனுப்பப்படும் தந்திகள், பரீட்சை நியமனங்கள் சம்பந்தமான விண்ணப்பங்கள் என்பனவையாகும்.

இக்கப்பல் மூலம் அனுப்பப்படும் தபாற்பைகளின் உச்ச நிறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவற்றிற்கு முதலிடம் வழங்கப்பட்டது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 8 - 04 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்-1585

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0512, 42-3945, 26-2786, 27-9416, 26-3722 28-8367, 26-6361, 26-3633, 26-7039, 26-6320 27-5863, 28 6624, 42-0969, 26 2345, 42,3993 26-4376, 24-9476, 42-3815, 24-172, 26-7187.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9167, 40-9188, 41-9895, 41-7865, 40-2829 43-1062, 28 4255, 26-7227, 28-4707, 26-0573 28-9186, 27-1255, 22-9193, 24-0521, 27-7281 28-8421.

### 09 - 04 - 94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்-1597

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-9992, 22-4895, 28-2345, 26-9283, 24-5241, 24-6448, 27-1375, 42-9325, 42-1750, 42-6511, 24-6699, 41-9746, 24-0416.

**COMPUTER** கல்வி

Diploma in Computer Programming Basic Language 4 Months

செவ்வாய், வியாழன் வகுப்புகள்

ஆரம்பம்: 12·04·94 மணி 10.30

Fees - மாதம் 400/-

LOTUS 1-2-3 2 Months

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: 18 04.94 மணி 2.30

Fees மாதம்- 1000/-

ectures by S. P. SIVAPATHASUNDARAM M I D P M (Lond.)

CIMA, IAB, SHORTHAND & TYPING நடைபெறுகின்றன.

உறுதியான கல்வியைப் பெற

School of Business Administration

16, 3rd CROSS STREET, JAFFNA (இ-9079)

## கணிதபாட செயலமர்வு

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் 1993-ம் ஆண்டு கணிதபாட விசேட செயலமர்வில் பங்குபற்றிய சகல மாணவர்களையும் மேற்படி நிலையத்தில் நாளை திங்கட்கிழமை 3 மணிக்கு ஒன்றுகூடுமாறு மூலவள நிலையப் பொறுப்பு அதிகாரி திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

## யாழ் நகரப்

இதேவேளை சுமார் தொண்ணூறு வீதமான கர்ப்பவதிகளிடம் மந்தமான போசாக்கு காணப்படுவதாகவும், இதனால் இவர்கள் பிரசவ காலங்களில் பலவீனமாகவும், பிரசவிக்கும் குழந்தைகள் பலவீனமானவர்களாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் இத்தகையோர் சிகிச்சை நிலையங்களுக்கு சிகிச்சை பெறவரும்போது வழங்கப்படுவதற்கான திரிபோஷா போன்ற உணவு வகைகளைக் கூட வழங்க முடியாத நிலை இருப்பதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி)

## குண்டு

த்திலிருந்து 100யார் தொலைவிலும் கடற்படை தலைமையகத்திற்கு அருகாகவும் அமைந்துள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு அருகிலேயே பிரதமரின் தனிப்பட்ட இல்லம் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## குண்டுவெடிப்பு

செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது புலன் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அருணாசலம் தங்கியிருந்த வீட்டிலிருந்து மற்றுமொரு குண்டைக் கைப்பற்றியுள்ளனர் எவுனம் கூறப்படுகிறது.

## பிளாஸ்ரிக்

ஜனாதிபதி பிரேமதாசாவின் உயிரிழப்பிற்கான குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் சுமார் ஒரு வருடத்தின் பின் மீண்டும் கொழும்பில் குண்டு வெடித்துள்ளதாக அவ் வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

## டி. பியின்

யுத்த நடவடிக்கை வடக்கில் மட்டும் அல்ல; நாடு பூராகவும் பரவியுள்ளது என்பதை காட்டும் முகமாகவும் சமாதான தீர்வு ஒன்றை நோக்கி அரசாங்கத்தை நகர்த்தும் முகமாகவும் நடாத்தப்பட்டதவே இக் குண்டு வெடிப்புக்களை எடுத்துக் கொள்ளலாம் என அவதானிகள் தெரிவித்தனர்.

## கிழக்கு

மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் பஸ்நிலையத்திற்கு வருகை தருமாறு சக மாணவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்

## உல்லாசப்

இராணுவ ஆட்சேர்ப்பையும் மேற்கொண்டு வரும் சிறிலங்கா அரசுக்கு உல்லாசப் பயணத்துறையில் ஏற்படும் வீழ்ச்சி பெரும்தாக்கத்தையே தரும் என அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் அரசின் தோல்வியை

## விடுதலைப் புலிகள்

நோக்கிற்குள் 5 குண்டுகள்

இன்று மன்ற அரங்கில்

இன்ப இரவு 10 - 4 - 94 இசை இரவு

திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

மெல்லிசை விருந்து

(10) "பத்தே பத்து" (10)

புதிய உயர் கல்லூரி

(ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம்.

OL

DAY CLASSES

பகல் நேர வகுப்புக்கள்

## மரண அறிவித்தல்



கந்தையா மார்க்கண்டு

(10) பத்தே பத்து (10)

Commandments — கட்டளைகள்

மாலை 6. 45 — மாலை 6. 45

**இசையும், கதையும், காட்சியும்**
**இணைந்து தரும் இன்பம்**
**பார்த்து மகிழுங்கள்**

❋ ஆசனப் பதிவுக்கு முந்துங்கள்

(இ9082)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளை கோப்பாய்ப் பிரிவு.

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் பிரிவுத் தேர்தலும்

27 - 03 - 1994 இல் ஒத்திவைக்கப்பட்ட மேற்படி கூட்டமும், தேர்தலும் 24-04-1994 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 11.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கோப்பாய் பிரிவுத் தலைவர் வைத்திய கலாநிதி வைத்திலிங்கம் தியாகராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும். 12.03.1994 இளையில் அங்கத்துவப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மாத்திரமே இக்கூட்டத்திலும் தேர்தலிலும் பங்குபற்ற வருகை தரும்படி கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் பிரிவுக் காரியாலயத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். 13.03.1994 இல் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்து 15.03.1994 இல் வாபஸ் பெறாத போட்டியாளர்களே தேர்தல் போட்டியில் பங்குபற்றுவர். இது தொடர்பான சுற்றுநிருபங்கள் பிரிவுக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
இ. மயில்வாகனம்
கௌரவ செயலாளர்,
கோப்பாய்ப் பிரிவு.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07.04.1994. (இ-9078)

---

DAY CLASSES
பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்:
11. 04. 94 திங்கள்
காலை 8. 00 மணி
(வகுப்புக்கள் 4 நாட்கள் நடைபெறும்)
(இ - 9033)

---

விடுதலைப் புலிகள் நேரத்திற்குள் 5 குண்டுகள் வெடித்துள்ளன. கிடைத்துள்ள தடயங்களை வைத்துப் பார்க்கும் போது இச் செயல் விடுதலைப் புலிகளால்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிகிறது என ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாஸ தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் அரசின் தோல்வியை அடுத்து அரசுக்கு தற்போது வெளிநாட்டு நிதியுதவி கிடைப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது இந்நிலையில் உல்லாசப்பயணத்துறையையே அரசு பெரிதும் நம்பியுள்ளது என எல்மோ பெரேரா கூறினார்.

---

உ

சிவமயம் — விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருஷம் பங்குனித் திங்கள் 29-ம் நாள் (11-04-94) திங்கட்கிழமை முற்பகல் 12-06 மணி முதல் 1-36 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

| | | |
|---|---|---|
| எமது மகன் | | எமது மகள் |
| திருநிறைச் செல்வன் | | திருநிறைச் செல்வி |
| **பரமேஸ்வரன்** | ★ | **சறோயினி** |
| அவர்களுக்கு | | அவர்களை |

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்யதாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில்: 12-04-94 செவ்வாய்க்கிழமை 4 மணி தொடக்கம் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இ. நாகலிங்கம்
குடும்பத்தினர்
காளிகோவிலடி, சங்கானை.

திருமதி அ. பெரியதம்பி
குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(இருவீட்டார் அழைப்பு)

(7989)

---

## கந்தையா மார்க்கண்டு

வண்ணார்பண்ணை வடமேற்கு பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த கந்தையா மார்க்கண்டு 06.04.94 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும், அருமைத்துரை (ஸ்ரீலட்சுமி ஸ்ரோர்ஸ் கொழும்பு 2), குகதாசன் (பிரான்ஸ்), சண்முகதாஸ் (லட்சுமி ஸ்ரோர்ஸ் வேணியடி) புஸ்பரஞ்சினி (பிரான்ஸ்), தவரஞ்சினி, தவமணி, முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவகங்கை, செல்வறாணி, செல்வதேவி, இவானந்தமூர்த்தி, வீரகத்திப்பிள்ளை (அதி) ஆகியோரின் மாமனாரும், சுபாகரன், தாரணி, சிவந்தினி யோகராஜ், அஸ்வந், அஸ்வினி, நிஸாந்தன், நிவேஜன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-04-94 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

96, பத்திரகாளி கோவிலடி,
வண் - வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்
மா. சண்முகதாஸ்
(மகன்)

(7990)

---

## கண்ணீர் அஞ்சலி

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட காங்கேசு சுதாகரன் சரவெட்டி, சிவானந்தராசா தயானந்தன் கல்வியங்காடு ஆகிய இரு காவல்துறையினருக்கும் எமது சங்கம் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றது.

கைத்தொழில் வர்த்தகர்சங்கம்
சாவகச்சேரி

(இ-9081)

---

சிறந்த பட்டுப்புடவைகளுக்கு பெயர் பெற்ற ஸ்தாபனம்

**லலிதா பட்டுச்சோலை**

இல. 5, 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

[இன்றே உடன் விஜயம் செய்யுங்கள்]

(இ-9047)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.